யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015

# Term Examination, November - 2015

| தரம் : 13 (2016) | புவியியல் – II | நேரம் : 3 மணித்தியாலங்கள் |
|---|---|---|

**அறிவுறுத்தல் :**

- **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்த பட்சம் இரு வினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

## பகுதி - I

## பௌதிக புவியியல்

1)

(i) தகட்டோட்ட செயன்முறை என்பது யாது [4 புள்ளிகள்]

(ii) புவியோட்டு விருத்திக்குரிய நான்கு தகடுகளைப் பெயரிடுக. [4 புள்ளிகள்]

(iii) தகட்டசைவினால் உருவாகும் இரு பிரதான நில உருவங்களை விபரிக்குக. [6 புள்ளிகள்]

(iv) தகட்டசைவினால் ஏற்படும் பௌதிக மானிட தாக்கங்கள் மூன்றினை விளக்குக. [6 புள்ளிகள்]

2)

(i) அ) இலங்கையின் ஈரவலய ஆறுகள் நான்கினைப் பெயரிடுக. [2 புள்ளிகள்]

ஆ) இலங்கையில் தரைக்கீழ் நீர்வளம் காணப்படும் நான்கு பிரதேசங்களைப் பெயரிடுக. [2 புள்ளிகள்]

(ii) இலங்கையின் வடக்கு மற்றும் வடமேற்குப் பிரதேசங்களில் தரைக்கீழ் நீர் முக்கியத்துவம் பெறுவதற்கான இரு காரணங்களை ஆராய்க. [4 புள்ளிகள்]

(iii) உலகில் நீர்வளம் தொடர்பாக ஏற்பட்டுவரும் நான்கு பிரச்சினைகளை விளக்குக. [6 புள்ளிகள்]

(iv) நீர்வளத்தைப் பாதுகாக்க மேற்கொள்ள வேண்டிய மூன்று நடவடிக்கைகளை ஆராய்க. [6 புள்ளிகள்]

3)

(i) உலகின் நான்கு பிரதான உயிரினக் கூட்டங்களைப் பெயரிடுக. [2 புள்ளிகள்]

(ii) மேலே (i) இல் உம்மால் பெயரிடப்பட்ட உயிரினக் கூட்டத்தைத் தெரிவுசெய்து அதன் முனைப்பான பண்புகள் நான்கினை ஆராய்க. [6 புள்ளிகள்]

(iii) மேலே (i) இல் உம்மால் குறிப்பிட்ட ஏதாவது ஒரு உயிரினக் கூட்டம் எதிர்நோக்கும் மூன்று பிரச்சினைகளை விவரிக்க. [6 புள்ளிகள்]

(iv) காடுகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் நான்கு நடவடிக்கைகளை விளக்குக. [6 புள்ளிகள்]

4)

(i) கடற்கரை ஒன்றின் நெடுக்குப் பக்க பார்வையினை வரைந்து அதன் நான்கு பகுதிகளைப் பெயரிடுக. [4 புள்ளிகள்]

(ii) பின்வரும் கரையோர நில உருவங்கள் ஒவ்வொன்றினதும் உருவாக்க செயன்முறைகளை விளக்குக.

அ) தடைத்தீவு
ஆ) வளைவுகளும் குவடுகளும்
இ) அலைவெட்டிய மேடை [6 புள்ளிகள்]

(iii) கரையோரங்களில் அலையின் படிதல் செயன்முறையினால் உருவாகும் இரண்டு நில உருவங்களை விளக்குக. [4 புள்ளிகள்]

(iv) கரையோர அரித்தலினை இழிவளவாக்க மேற்கொள்ளப்பட்டு வரும் மூன்று நடவடிக்கைகளை ஆராய்க. [6 புள்ளிகள்]

## பகுதி - II

## மானிடப் புவியியல்

5)

(i) ஆசியாவில் அதிகளவு குடித்தொகை கொண்ட மூன்று பிரதேசங்களைக் குறிப்பிடுக.[3 புள்ளிகள்]

(ii) ஆசியாவின் குடித்தொகை அதிகரிப்பிற்குப் பங்களித்த நான்கு காரணிகளைப் பரிசீலிக்க. [5 புள்ளிகள்]

(iii) உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் இடப்பெயர்விற்கு மூன்று காரணங்களை ஆராய்க. [6 புள்ளிகள்]

(iv) இலங்கையின் உள்நாட்டு இடப்பெயர்வின் மூன்று பண்புகளை விளக்குக. [6 புள்ளிகள்]

6)

(i) உலக விவசாயத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட இரு நடவடிக்கைகளைப் பெயரிடுக. [2 புள்ளிகள்]

(ii) இலங்கையின் விவசாயத்துறையில் அண்மையில் ஏற்பட்டுவரும் மூன்று மாற்றங்களை விளக்குக. [6 புள்ளிகள்]

(iii) நவீன தொழில்நுட்ப மாற்றத்தினால் விவசாயத்துறையில் ஏற்பட்டுவரும் இரு விளைவுகளைப் பரிசீலிக்க. [6 புள்ளிகள்]

(iv) இலங்கையில் விவசாயம் தொடர்பான பிரச்சினைகளை இழிவளவாக்க மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் மூன்றினை விபரிக்குக. [6 புள்ளிகள்]

7)

(i) குடியிருப்பு ஒன்றின் அடிப்படை மூலங்கள் நான்கினைப் பெயரிடுக. [2 புள்ளிகள்]

(ii) இலங்கையில் உள்ள மூன்று வகையான கிராமக் குடியிருப்புக்களைக் குறிப்பிடுக. [3 புள்ளிகள்]

(iii) மேலே (ii) இல் நீர் குறிப்பிட்ட கிராமக் குடியிருப்பு வகை ஒன்றினைத் தெரிவுசெய்து அதன் முனைப்பான பண்புகளை விபரிக்க. [7 புள்ளிகள்]

(iv) கிராமக் குடியிருப்புகளுக்கும் நகர குடியிருப்புகளுக்கும் இடையிலான மூன்று வேறுபாடுகளைப் பரிசீலிக்க. [8 புள்ளிகள்]

8)

(i) அ) பெருநகரமொன்றின் (megacity) ஆகக்குறைந்த குடித்தொகை அளவு யாது [2 புள்ளிகள்]

ஆ) ஆசியாப் பிரதேசத்தில் அமைந்துள்ள நான்கு பெருநகரங்களைப் பெயரிடுக. [4 புள்ளிகள்]

(ii) உலக நகராக்கத்தின் நான்கு பிரதான பண்புகளைப் பரிசீலிக்க. [7 புள்ளிகள்]

(iii) நகராக்கத்தினால் வளர்முக நாடுகள் எதிர்நோக்கும் மூன்று முனைப்பான பிரச்சினைகளை ஆராய்க. [7 புள்ளிகள்]